# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./SC./7–16, 29–12–2009 நாளிட்டது**

ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டடதன் தமிழாக்கம்

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி குறித்துரைத்து அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும் மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI –பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் மின்நுகர்வு (மி.நு) கட்டணங்கள் பொறுத்து, அரசுத்துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளினால் வழங்கப்படும் காசோலைகள், நிதித்தேவை உள்ளடங்கலான பல்வேறு காரணங்களுக்காக அவைகளுடைய வங்கியாளரால் மதிப்பு மறுக்கப்படுவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகள் அறியப்படுகிறது. அரசுத்துறைகளின் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள், அவர்களுடைய காசோலைகள் மதிப்பு மறுக்கப்படும் போதெல்லாம், மின் வழங்கல் விதித்தொகுப்பின் ஒழுங்குமுறைவிதி 15(3)இன்படி கடைசி மூன்று தொடர்ச்சியான பட்டியல் கால அளவிற்கான மின்நுகர்வு கட்டணங்களைத் தீர்வு செய்வது பொறுத்து நுகர்வோர் செயற்பாடுகளை கண்காணிக்காமல், அவர்களுடைய காசோலை வழங்கும் வசதியினை அறவு செய்தல் கவனிக்கப்படவேண்டும் என்று எடுத்துரைத்துள்ளனர். மின்நுகர்வு கட்டணங்களை ரொக்கமாக /வரைவோலை வாயிலாகச் செலுத்துவதற்கு அவர்களுடைய அலுவலக நடைமுறைகள் அனுமதிக்கவில்லை மற்றும் இந்த இடர்ப்பாடு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்பதாலும்,

மற்றும் அரசுத்துறைகளாலும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளாலும் காசோலை வழியாகச் செலுத்துகை செய்யும் வசதியை திரும்ப அளிப்பது பொறுத்த இடர்ப்பாடுகளை நீக்கும்பொருட்டு தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஒருசில திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு

உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது,அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 50ஆம் பிரிவினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை குறித்துரைக்கிறது :—

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

a) இந்த விதித்தொகுப்பு, 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழங்கல் (திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

b) இது, தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பின் 15ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல் :**

தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பின் 15ஆம் ஒழுங்குமுறைவிதியில், (3)ஆம் உள்—ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக, பின்வரும் உள்—ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும்.

‘‘ (3) தாழ் அழுத்த நுகர்வோர் கொடுபடவேண்டிய தொகையை ரொக்கமாக அல்லது பண அஞ்சல் மூலமாக அல்லது வட்டார வங்கியின் வரைவோலை மூலமாக அல்லது மின்பகிர்மான பிரிவு அலுவலகம் அமைந்திருக்கிற இடத்திலுள்ள வங்கிக்கு வரையப்பட்டுள்ள காசோலை மூலமாக அல்லது மின் பகிர்மான உரிமம்தாரரால் குறிப்பிடப்படுகிறவாறு மின்னணுவியல் செலுத்தும் வாயிலாக செலுத்துதல் வேண்டும். எனினும், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இருப்பூர்தியங்கள், தங்களுடைய அலுவலகங்கள் அமைந்திருக்கிற இடத்திலுள்ள வங்கிகளுக்குக் காசோலைகள் வழங்கலாம் மற்றும் உரிமம்தாரர் அத்தகைய நுகர்வோரிடமிருந்து தண்டல் கட்டணங்கள், எவையேனுமிருப்பின் அவற்றைக் கோரலாம். ரூ.2000/—க்கு அதிகமான தொகையானது வரைவோலை / காசோலை வாயிலாகச் செலுத்தப்படும் சூழ்நிலைகளைப் பொறுத்து, பொறியாளர், ரொக்கமாகச் செலுத்துகையை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் மற்றும் நுகர்வோருக்கு எதிர்

காலச் செலுத்துகைகளை வரைவோலை /காசோலை வாயிலாகச் செலுத்தும்படி அறிவுரை வழங்குதல் வேண்டும். எந்த வகையான காரணத்தினாலும் காசோலை மதிப்பு மறுக்கப்படும் நேர்வில், தாழ் அழுத்த நுகர்வோர், அதன்பின்பு, கொடுபடவேண்டிய தொகையை ரொக்கமாகவோ /பணஅஞ்சல் மூலமாகவோ / வரைவோலை மூலமாகவோ மட்டும் செலுத்துமாறு கோரப்படுவர். உரிமம்தாரர், தாழ் அழுத்த நுகர்வோர் பொறுத்து குறைந்தது கடைசி மூன்று தொடர்ச்சியான பட்டியல் காலஅளவிற்கு அல்லது உயர் அழுத்த நுகர்வோர் பொறுத்து மூன்று மாதங்கள் காலஅளவிற்கு மின்நுகர்வு கட்டணங்களைத் தீர்வு செய்வது பொறுத்து நுகர்வோர் செயற்பாடுகளை கண்காணித்த பின்பு, நுகர்வோரால் செலுத்துகைக்கான காசோலை வசதியினை திரும்ப அளிப்பதற்கு இசைவு அளிப்பதற்கு அதிகாரம் உடையவர் ஆவார். எனினும், உரிமம்தாரர், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் (மத்திய மற்றும் மாநில) அரசுத்துறைகள் பெயரிலுள்ள மின்னிணைப்புகள் பொறுத்து மூன்று தொடர்ச்சியான பட்டியல் காலஅளவுகளில் அவர்களுடைய செயற்பாடுகளை கண்காணிக்காமல், காசோலை மூலம் செலுத்தும் வசதியை திரும்ப அளிப்பதற்கான ஒப்புதல் அளிக்கலாம். உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசுத் துறைகள் அல்லாத பிற நுகர்வோருக்காக, உரிமம்தாரர், பிந்திய மின் கட்டணங்கள் தீர்வு குறித்து நுகர்வோரின் செயற்பாடுகளை கண்காணித்த பின்பு நான்காவது முறையாக, காசோலை மூலமாகச் செலுத்தும் வசதியைத் திரும்ப அளிப்பதற்காக அதிகாரங்கள் உடையவர் ஆவார். அத்தகைய நுகர்வோர், பின்வருவனவற்றிற்குக் கூடுதலாக, ஆணையத்தினால் குறிப்பிடப்படுகிறவாறு, காசோலை மதிப்பு மறுக்கப்பட்டதற்கான சேவைக் கட்டணங்களை செலுத்துதல் வேண்டும் :–

(a) தாழ் அழுத்த நுகர்வோர் : கூடுதல் சேவைக் கட்டணங்களாக மதிப்பு மறுக்கப்பட்ட காசோலைத் தொகையில் குறைந்தபட்சம் ரூ.500/–க்கு உட்பட்டு 1 விழுக்காடு ;

(b) உயர் அழுத்த நுகர்வோர் சேவைக்கட்டணங்களாக குறைந்தபட்சம் ரூ.1000/–க்கு உட்பட்டு மதிப்பு மறுக்கப்பட்ட காசோலைத் தொகையில் 1 விழுக்காடு ;

(c) காசோலை மூலம் செலுத்தும் வசதியை திரும்ப அளிக்கும் சலுகையானது, அதன் பின்பு மின்னிணைப்பிற்காக அளிக்கப்படுதல் ஆகாது ;

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**இரா. பாலசுப்பிரமணியன்**
செயலாளர்